# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு

2015/2016 (ஆகஸ்ட் 2018)

**TL/S 3213 தற்கால ஈழத்துத் தமிழ் இலக்கியம்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி – I

1. (அ) ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்திய இந்திய - தமிழக அரசியல், சமூக, இலக்கிய இயக்கங்கள் யாவை? (06 புள்ளிகள்)

   (ஆ) அவற்றுள் ஒன்றைக் குறிப்பிட்டு, அவ்வியக்கம் எவ்வெவ் வகைகளில் ஈழத்து நவீன இலக்கியத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (14 புள்ளிகள்)

2. (அ) ஈழத்து முற்போக்கு அணி சார்ந்த இலக்கிய விமர்சகர்கள் ஐவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   (ஆ) அவர்கள் முன்வைத்த இலக்கிய விமர்சனத்தின் அடிப்படைப் பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

3. (அ) ஈழத்து நவீன நாடக முன்னோடிகள் இருவரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (ஆ) அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட நவீன நாடக மரபு பிற்காலத்தில் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

## பகுதி – II

4. "ஈழத்து நவீன தமிழ்க் கவிதை, 'மறுமலர்ச்சி' சஞ்சிகைக் கவிஞர் குழுவின் கவிதைகளுடனேயே முழுமையெய்துகிறது" ஆராய்க. (20 புள்ளிகள்)

5. "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் யதார்த்தப் பண்பு 1950 களில் எழுதிய எழுத்தாளர்களாலேயே பூரணத்துவம் பெற்றது" ஆராய்க. (20 புள்ளிகள்)

6. "ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியில் 1980 களில் புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன" ஆராய்க. (20 புள்ளிகள்)

7. இருபதாம் நூற்றாண்டு ஈழத்துப் பெண்கள் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக. ( 20 புள்ளிகள்)